புத்தகம்-௩. 1907ௗ அக்டோபர்மீ 15உ இலக்கம்-௧௨.

சுகாதார போதினி:

௧-ம், பிரிவு.

வைத்தியக் குறிப்புகள்

முன்தொடர்ச்சி (Vol-III. பக்கம் 130.)

இரைப்பை ரோகச் சிகிச்சை.

மேற்றோல் சீவின சுக்குச்சூரணம் விராகனெடை-௧0, சோம்புச் சூரணம் விராகனெடை-டு, ரூமிமஸ்தகிச்சூரணம் விராகனெடை-௩, கற்கண்டுத்தூள் விராகனெடை-௨0.

செய்முறை:—இவை யெல்லாவற்றையும் ஒன்றுக மிஸ்ரமித்துக் கல்வத்திலிட்டு அரைமணிநேரம் அரைத்து எடுத்துக் கொள்வதேயாம்.

பிரமாணம்:—விராகனெடை-௧, ௧௨. காலைமாலையிரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

உபயோகம்:—இரைப்பையிலுள்ள அசுத்த மாசுக்களை நீக்கி அதைச் சுத்திசெய்யும், பசிதீபனத்தை அதிகப்படுத்தும், பித்தத்தைச் சமப்படுத்தும்.

நிலஆவாரைச் சூரணம்.

குச்சி, காம்பு முதலியவைகளை ஆய்ந்து சுத்திசெய்த சூரத்துநில ஆவாரைச் சூரணம், மஞ்சட் கடுக்காய்த்தோற் சூரணம், கறுப்புப்புத்தூள் இவை வகை-௧-க்குப் பலம்-௧௨.

செய்முறை:—இவை யெல்லாவற்றையுங் கலந்து கல்வத்திலிட்டு அரைமணி நேரமரைத்துச் சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—விராகனெடை-டு, ௬. இதனையுட்கொண்டு அதன்மேற் கொஞ்சம் வெந்நீர்பானஞ் செய்யவும். இரண்டொரு தடவை மலம்போகும். காலையில் ஒருவேளை மாத்திரம் போதுமானது. தேக சுபாவத்தை நிதானித்து இதன் பிரமாணத்தைக் குறைத்தும் உபயோகிக்கலாம் அதிகப்படுத்தியு முபயோகிக்கலாம். அவசியமானால் இதன் சமனெடை சர்க்கரையைச் சேர்த்தும் சாப்பிடலாம்.

உபயோகம்:—வயிற்றுநோய், குன்மநோய், ஆகியவைகளைக் கண்டிக்கும். வாதநீர், பித்தநீர், கபநீர் ஆகிய மூவகை நீரையும் மலவழியாகக் கழிக்கும். பசிதீபனத்தை யுண்டாக்கும்.

கறியாதிச் சூரணம்.

மிளகுச்சூரணம், அரிசித்திப்பிலிச் சூரணம், கறுப்புப்பு இவை வகை-௧-க்கு விராகனெடை-அ, பொரித்த வெண்காரத்தூள் விராகனெடை-௪, எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இவை யெல்லாவற்றையுங் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து எட்டுசாம நேரமரைத்துப் பிறகு உலர்த்தி மறுபடியுங் கல்வத்திலிட்டுப் பொடித்துச் சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௪, முதல் எட்டுவரையில். ஆகாரத்தின்மீது சாப்பிட வேண்டும்.

உபயோகம்:—பசிதீபனத்தை யுண்டாக்கும், மந்தாக்கினிரோகம், அஜீரணரோகம் ஆகியவைகளைக் கண்டிக்கும்.

கவோதிச் சூரணம்.

காபிலிக் கடுக்காய்த்தோற் சூரணம், தான்றிக்காய்த்தோற் சூரணம், நெல்லிவற்றற் சூரணம் இவை வகை-௧-க்கு விராகனெடை-எ, அரிசித்திப்பிலிச் சூரணம், கொடிவேலி வேர்ப்பட்டைச் சூரணம், லாஹூருப்புத்தூள் அல்லது, இந்துப்புத்தூள் இவை வகை-௧-க்கு விராகனெடை-௩.௨.

செய்முறை:—இவை யெல்லாவற்றையும் ஒன்றுகக் கலந்து கல்வத்திலிட்டு அரைமணி நேரமரைத்து பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—விராகனெடை-௸. ௧.

உபயோகம்:—இரைப்பையிலுள்ள வாயுவைக் கண்டிக்கும், கபக்கட்டு முதலியவைகளை நீக்கும்; அக்கினிமந்தம், அஜீரணரோகம் ஆகியவைகளை நீக்கிப் பசிதீபனத்தை யதிகப்படுத்தும்.

கிருஷ்ண லவணச் சூரணம்.

கருப்புப்புத்தூள் விராகனெடை-டு0, தான்றிக்காய்த்தோற் சூரணம் விராகனெடை-௧0, மிளகுச் சூரணம், ஓமச்சூரணம், கொடிவேலி வேர்ப்பட்டைச் சூரணம், அரிசித்திப்பிலிச் சூரணம் இவை வகை-௧-க்கு விராகனெடை-௬, எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட சரக்குகளெல்லாவற்றையுங் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாம நேரமரைத்து வெயிலிலுலர்த்தவேண்டும். ஈரமில்லாமல் நன்று யுலர்ந்தபின்பு மறுபடியுங் கல்வத்திலிட்டுப் பொடித்து முன்போலவே யெலுமிச்சம் பழச்சாற்றை விட்டு நான்குசாம நேரமரைத்து முன்போலுலர்த்த வேண்டும். முன்போல் ஈரமில்லாம லுலர்ந்தபின்பு முன்போற் பொடித்து முன்போல் முன் சாற்றைவிட்டு நான்குசாம நேரமரைத்து உலர்த்திச் செம்மையாக வுலர்ந்தபின்பு பொடித்து சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—விராகனெடை-க. இதனைக் காலைமாலை யிரண்டுவேளையு முபயோகிக்கலாம். ஆகாரத்தின்மீதும் உபயோகிக்கலாம்.

உபயோகம்:—இரைப்பையிலுள்ள வாயுக்கள், கபக்கட்டுகள் ஆகியவைகளைக் கண்டிக்கும். வயிற்றுவலி குன்மரோகம் ஆகியவைகளைப் போக்கும். மந்தாக்கினி ரோகம், அஜீரணரோகம் ஆகியவைகளைக் கண்டித்து தீபன சத்தியையும், பசிதீபனத்தையு முண்டாக்கும்.

சிறு லவணாதி லேகியம்.

இந்துப்புத்தூள் விராகனெடை-ரு, மஞ்சட் கடுக்காய்த்தோற் சூரணம் விராகனெடை-கரு, குச்சி, விதை முதலியவை நீக்கின திராக்ஷைப்பழம் விராகனெடை-ருO.

செய்முறை:—இவை யெல்லாவற்றையும் உரலிலிட்டு வெண்ணெயபோலிடித்து லேகியபதமாக எடுத்து வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—விராகனெடை-க, ரு, காலையிலொரு வேளை மாத்திரம் உபயோகித்து வந்தாற் போதுமானது. சில சமயங்களில் சில தேகிகளுக்கு இரண்டு வேளையும் உபயோதிக்கலாம்.

உபயோகம்:—மலபந்தத்தை நீக்கும். மலச்சிக்கலை நீக்கி மலத்தைக்கிரமப்படுத்தும். பசிதீபனத்தையுண்டாக்கும்.

சாரமாதிச் சூரணம்.

நவச்சாரம் (இதனைத் தூள்செய்து ஓட்டிலிட்டு ஈரம் உலரும்படியாக வறுத்துப் பொடித்து நிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும்) மேற்றோல் சீவினசுக்குச் சூரணம், மிளகுச் சூரணம், அரிசித்திப்பிலிச் சூரணம், இலவங்கச் சூரணம், ரோஜாப்பூச் சூரணம், கறுப்புப்புத் தூள் இவை வகை-க-க்குப் பலம்-க.

செய்முறை:—இவை யெல்லாவற்றையும் ஒன்றுகக் கலந்து கல்வத்திலிட்டு ஒருமணி நேரமரைத்துச் சீஷாவிற் பத்திரப்படுத்த வேண்டும்.

பிரமாணம்:—விராகனெடை-க, காலைமாலை யிரண்டுவேளையு முபயோகிக்கலாம்.

உபயோகம்:—வயிற்றுநோய், குன்மரோகம், அஜீரணரோகம் முதலியவைகளைக் கண்டிக்கும். நீரையதிகப்படுத்தி பாண்டுரோகம், வீக்கம் முதலியவைகளைக் குணப்படுத்தும்.

மாதுளைச் சூரணம்.

மாதுளம்பழச் சுளையை வெயிலிலுலர்த்தி விராகனெடை-சாO, மேற்றோல் சீவினசுக்கு, நற்சீரகம், இவை வகை-க-க்கு விராகனெடை-ரு லாஹூருப்புத்தூள், அல்லது, இந்துப்புத் தூள் பலம்-கஉ௯.

செய்முறை:—இவை யெல்லாவற்றையும் சேர்த்திடித்து வஸ்திரகாயஞ் செய்யாமல் தெள்ளியெடுத்துக் கொள்ளவேண்டும்.

பிரமாணம்:—விராகனெடை-உ௯, ஙு௯ காலைமாலை யிரண்டுவேளையு முபயோகிக்கலாம். சமயோசிதம்போல இதன் பிரமாணத்தை அதிகப்படுத்தியும் குறைத்துங் கொள்ளலாம்.

உபயோகம்:—மந்தாக்கினிரோகம், அஜீரணரோகம் ஆகியவைகளைக் கண்டித்துப் பசிதீபனத்தை விருத்தியாக்கும். இரைப்பையைப் பலப்படுத்தும். பித்தபேதி, உஷ்ணபேதி ஆகியவைகளைக் கட்டும். இன்னும் பித்த மயக்கம், பித்தவாந்தி முதலிய பித்தசம்பந்த ரோகங்களுக்கும் உபயோகமாகும். பித்த வாயுவையுங் கண்டிக்கும்.

ஜீரணவிருத்திச் சூரணம்.

மஞ்சட் கடுக்காய்த்தோல் சூரணம், தான்றிக்காய்த்தோற் சூரணம், நெல்லிவற்றற் சூரணம், சீரகச்சூரணம், சோம்புச் சூரணம், கறுப்புப்புத்தூள், குச்சி காம்பு முதலியவைகள் நீக்கப்பட்ட சூரத்து நிலஆவாரைச் சூரணம், இவை வகை - க-க்கு விராகனெடை-ஙு, மேற்றோல் நீக்கின சுக்குச் சூரணம் விராகனெடை-க௯.

செய்முறை:—மேற்படி சூரணங்களை யெல்லாம் ஒன்றாகக்கலந்து கல்வத்திலிட்டு ஒருமணிநேரமரைத்துச் சீஷாவிற் பத்திரப்படுத்த வேண்டும்.

பிரமாணம்:—விராகனெடை-௧௰, ௧௨. இரவில் நித்திரைசெய்யப் போகும்போது சாப்பிடவேண்டும்.

உபயோகம்:—மலபந்தத்தை நீக்கும், மலச்சிக்கலைநீக்கி அதைக்கிரமப்படுத்தும் அஜீரணரோகத்தை நீக்கிப் பசுதீபனத்தை பிதிகப்படுத்தும். ஆகாரத்தை ஜீரணிக்கச் செய்யும்.

வேறு.

உப்பைவறுத்துப் பற்பமாக்கின தூள் விராகனெடை-௫, சோம்புச்சூரணம், பொதினாச்சூரணம், தாளிசபத்திரிச் சூரணம் இவை வகை-௧-க்கு விராகனெடை-௨௰, மேற்றோல் சீவின சுக்குச்சூரணம், பொரித்த பெருங்காயச்சூரணம், வறுத்த மிளகுச் சூரணம் இவை வகை ௧-க்கு விராகனெடை-௧௰.

செய்முறை:—இவை யெல்லாவற்றையும் ஒன்றாக மிஸ்ரமித்துக் கல்வத்திலிட்டு ஒருமணி நேரமரைத்துச் சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—விராகனெடை-௧, ௧௰. இதனைக் காலை மாலை யிரண்டுவேளையும் உபயோகித்துவரலாம். ஆகாரத்தின்மீதும் சாப்பிடலாம்.

உபயோகம்:—வயிற்றுவலி, குன்மரோகம் ஆகியவைகளைக் கண்டிக்கும். மந்தாக்கினிரோகம், அஜீரணரோகம் ஆகியவைகளைப்போக்கி இரைப்பையைப் பலப்படுத்தும்.

(இன்னும் வரும்)

சுகாதார போதினி.

௨-ம் பிரிவு.

குடும்ப வைத்தியம்

முன்தொடர்ச்சி (Vo-III-பக்கம்-123)

குவய்னு.

இது சுரசஞ்சீவி யென்பது பிரசித்தமான சங்கதி. ஆனால் இது வேறு வியாதிகளிலும் அதிகமாக உபயோகப்பட்டு வருகிறது.

நரம்பு சம்பந்தமான ஒருதலைநோய் பிரபலப்பட ஒருமணிக்குமுன்பே இரண்டரை அல்லது ஐந்து குன்றிமணியெடை குவய்னாவைச் சாப்பிட்டால் தலைநோயானது பிரபலப்படாமல் சாந்தமாகிவிடும்.

சுவாசகாசம், அல்லது, விக்கல் முறைக்கிரமமாய்க்காணுகிறதா யிருந்தால், மேற்கண்ட விதமாகக் கொய்னாவை யுபயோகிப்பதினால் அந்த வியாதி தடைப்பட்டு சௌக்கியத்திற் கேதுவாகும்.

விஷக்காற்றினால் உண்டான சீதபேதி ரோகத்திலும் மற்ற சிகிச்சைகளுடன் குவய்னாவையுங் கொடுக்க ஆவசியகமாகிறது.

மேகசம்பந்தமான கண் தாபிதரோகத்தில் அது முறைக்கிரமமாய் வருகிறதாயிருந்தால் அதை மேற்கண்டபடி யுபயோகிப்பதினால் குணமுண்டாகும்.

இன்னும்.

குவய்னா குன்றிமணியெடை-௰. அல்லது-௧.

சோடா குன்றிமணியெடை-௨. அல்லது-௨௰.

சீனிச்சர்க்கரை குன்றிமணியெடை-௰

இவை யெல்லாவற்றையும் ஒன்றாக மிஸ்ரமித்து இரவிற் படுக்கப் போகும்போது சாப்பிடவேண்டும். இவ்விதம் செய்து வருவதினால் மேகசம்பந்தமான கண்தாபிதரோகம்குணமாகும். மேற்படி ரோகமானது முறையாய் வரும்பக்ஷத்தில் மாத்திரம் உபயோகிக்க வேண்டியது.

சுரக்கட்டி கண்டிருக்கின்றவர்களுக்கு ஒவ்வொரு குன்றிமணியெடை குவய்னாவாகத் தினமொன்றிற்கு இரண்டு மூன்று தடவையாக நெடுநாள் உபயோகித்துவந்தால் அதிக குணமுண்டாகும்

வயது தளர்ந்தவர்களும், பட்டண வாசிகளும், தேகப் பயிற்சியில்லாமல் ஒரே இடத்தி லிருப்பதினால், அல்லது, ஜலம், காற்று முதலியவைகளின் விகற்பத்தால் கிரமமான பசியில்லாதிருந்தால் அரை அல்லது, ஒரு குன்றிமணியெடை குவய்னாவைக் காலை மாலை யிரண்டுவேளையு முபயோகித்து வருவதினால் கிரமமான பசியுண்டாகும்.

எச்சரிக்கை.

குவய்னாவானது அநேக வியாதிகளில் உபயோகப்படுகிறது உண்மையேயாயினும் அதனை யுபயோகிக்

கும்போது கீழ்க்காணும் சிலவிஷயங்களைக் கவனித்து உபயோகிக்க வேண்டியது,

1. குவய்னுவை யுபயோகிப்பதற்கு முன்பு ஏதேனுமொருவகை பேதிக்குக்கொடுத்து இரைப்பையைச் சுத்திசெய்து கொள்ள வேண்டியது ஆவசியகம்.

2. குவய்னுவை வயிறு நிறைந்திருக்கும்போது உபயோகிப்பதைப்பார்க்கிலும் வயிறு வெறுமனயிருக்கும்போது உபயோகித்தால் அதிகப் பிரயோசனத்தைத் தரும்.

3. குவய்னுவை மாத்திரையாக, அல்லது, சூரணமாக உபயோகிப்பதற்குப் பதிலாக விளாவின கெந்தகத்திராவகத்தை விட்டுப் பாகப்படுத்திக் கொடுத்தால் அதி சீக்கிரங் குணத்தைத்தரும்.

குவய்னுவை முந்திரியுப்பு, எலுமிச்சம்பழவுப்பு ஆகிய வைகளுள் ஒன்றுடன்கலந்து கொடுப்பதுண்டு அம்முறையாவது:—

குவய்னு குன்றிமணிபெடை-உ௦.

முந்திரியுப்பு, அல்லது, எலுமிச்சையுப்பு குன்றிமணியெடை } உ௦.

குளிர்ந்த ஜலம் பலம் க.

இவை யெல்லாவற்றையும் ஒரு சீஷாவிற்போட்டு நன்றாகக்குலுக்கி எல்லாங் கரைந்துபோன பின்பு பானஞ்செய்யவேண்டும். இது ஒருமுறைக்காம் அளவு. இவ்விதம் அவசியமான அளவு சித்தப்படுத்திக் கொள்ள வேண்டியது.

4. குவய்னுவை அதிக அளவாய் உபயோகித்ததினிமித்தம் அல்லது, தொடர்ச்சியாக அதனை உபயோகித்து வந்ததினிமித்தம் கீழ்க்காணும் லட்சணங்கள் உண்டாகும். அதற்கு கொய்னு விஷமித்த லட்சணங்கள் என்றும் இங்கிலீஷில் கொய்னிஜம் என்றும் பெயர். அவையாவன:—

நாவு வறண்டுபோதல், நீருக்கு அடிக்கடி வருவதுபோலிருத்தல், துளித்துளியாக நீரிறங்குதல், தேகம் திமிர்த்ததுபோலிருத்தல், தலைநோய், தலைசுற்றுதல், காதுமந்தப்படுதல், காதில் ஒருவகை யிரைச்சலுண்டாதல், வெகுட்டலாயிருத்தல், கண்களுக் கெதிரில் பொறிபறததல்போலிருத்தல் ஆகியவைகளாம். ஆகையால் இந்த இலட்சணங்களில் ஏதேனுமொன்று உண்டானால் உடனே குவய்னுவை நிறுத்திவிட வேண்டும்.

5. இரத்தக்கூறு மிகுத்ததேகிகளுக்கு, அல்லது, சிரசின் பக்கம் இரத்தவோட்டம் மிகுந்திருக்கும்போது அதிக ஜாக்கிரதையுடன் குவய்னுவை யுபயோகிக்கவேண்டியது. இந்தஜாக்கிரதை அதிக அனுபவசாலிகளான தேர்ந்த பண்டிதர்களினுற் செய்யக்கூடுமேயொழிய மற்றவர்களால் முடியாது. ஆகையால் சாதாரணமானவர்கள் இந்தச் சமயங்களில் குவய்னுவை யுபயோகிக்காம லிருப்பதே மகா உத்தமமான விஷயம்,

6. மூளையைப் பற்றின வியாதிகளில், அல்லது, சிறுகுடல் தாபிதரோகங்களில் குவய்னுவை யுபயோகிக்கலாகாது. இவ்விதமே சுரரோகங்களில் குடலில் தாபிதங் கண்டிருக்கும்போது தேர்ந்த வைத்தியர்களுடைய அனுமதியின்றிக் குவய்னுவை யுபயோகிக்கலாகாது.

(இன்னும் வரும்.)

சுகாதார போதினி.

௩-ம் பிரிவு.

ஸ்திரீ வைத்தியம்.

முன்தொடர்ச்சி (Vo. III-பக்கம்-132.)

பிரசவ நோவானது கிரமமாகக் கண்டுகொண்டிருக்கிறதா? இல்லையா? வென்பதைக் கவனித்துவரவேண்டியது. அந்த நோவானது குறைந்துபோனாலும், அல்லது, சுத்தமாக இல்லாதிருந்தாலும் உந்திக்கொடி வெளிப்படத் தாமதப்பட்டாலும் ஒரு குன்றிமணியெடை இப்பிக்காக்கைக் கொடுக்கவேண்டும். அச்சமயத்தில் அம்மருந்தில்லா விட்டால் வயிற்றின்மீது கையை வைத்து மெதுவாகத் தடவிக் கொடுப்பதினால் நோவு ஆரம்பிக்கும். காலிலிருந்து மார்புவரையில் உள்ள அவயவங்களில் புட்டம் வெளிப்படுவதுதான் கஷ்டமான ஒன்று. ஆகையால் அது வெளிப்படத் தாமதப்பட்டால் மருத்துவப் பெண்ணானவள் தான் அதை வெளிப்படுத்தவேண்டும். தன்னுடைய ஒருவிரலைச் சிசுவின் தொடையில் மாட்டி மெதுவாக நோவிருக்குஞ் சமயத்தில் இழுத்து வெளிப்படுத்த வேண்டும். ஆனால் அதை யிழுக்கும்போது மர்மஸ்தானத்தை மறுகையால் தாங்கிக்கொண்டிருக்கவேண்டியது ஆவசியகம்.

நாபிவரையில் வெளிப்பட்டு விட்டால் அந்தச் சமயத்தில் மருத்துவப் பெண்ணானவள் தன்புத்தியை அதிகம் செலவளிக்க வேண்டி யிருக்கிறது. ஏனெனில் கருப்பைக்குள் நஞ்சுக் கொடியானது ஒட்டிக்கொண்டு பிள்ளையின் நாபியுஞ் சம்பந்தப்பட்டிருக்கும். இதற்கு நச்சுக் கொடியென்றும் பெயர் வழங்குவதுமுண்டு. உண்மையில் இந்தக்கொடியானது மூன்றுவகையுண்டு, இரண்டு சிறியன, ஒன்று மொத்தமானது. சிறிய இரண்டு கொடிகள் மூலமாக கெட்டுப்போன இரத்தமானது திரும்பிப்போகிறது. தடித்த கொடி மூலமாக நல்லிரத்தமானது சிசுவுக்குச்செல்லுகிறது.

அந்த இரண்டு சிறு கொடிகளும் ஒரே கொடியைப்போல தோற்றுவதாகப் பெருங் கொடியுடன் சேர்ந்து சுற்றிக்கொண்டிருக்கும். இவ்விதம் பிள்ளை ஜீவித்திருப்பது இக்கொடிகளின் மூலமென்பது நன்கு விளங்கும்.

நாபிவரையிற் சிசுவானது வெளிவந்து விடுவதால் அக்கொடியானது மேற்பக்கமிருக்கும். அது மார்புவரையில் வெளிவரும்போது அந்தக்கொடி அறுபட்டுச் சிசுவுக்கு அபாயமுண்டாக ஏதுவாகும். ஆகையால் உடனே வெளிப்பட்ட தக்ஷணம் மருத்துவப்பெண்ணானவள் தன் ஒரு விரலை யுட்செலுத்திக் கொடியை யிழுத்துப் பிரசவ ஸ்திரீயின் வயிற்றெலும்புக்குச் சமீபத்தில் வெறுமையா யிருக்கின்ற விடத்தில் வைத்துவிட வேண்டும். இப்படிச் செய்வதினால்கொடியானது தளர்ச்சியாகி அது வெளிப்படும்போது பிகுவா யிராமலிருக்கும். ஆனால் இந்த விஷயத்தில் அதிஜாக்கிரதை வேண்டும். இச்சமயத்தில் மருத்துவப் பெண்ணானவள் ஸ்திரீயின் சமீபத்திலேயே யிருக்கவேண்டும். இருதயம் துடிப்பதுபோல அந்தக்கொடியானது அடிக்கடி துடிக்கிறதாவென அடிக்கடி கவனித்து வரவேண்டும். அக்கொடியானது அடிக்கடி நன்றாய்த் துடித்துக் கொண்டிருந்தால் மருத்துவப்பெண் ஒன்றும் செய்யவேண்டிய அவசியமில்லை. கொடியானது நன்றாய்த் துடிப்பதின் அருத்தமாவது சிசுவானது கஷ்டமின்றிச் சுவாசித்துக் கொண்டிருப்பதென்பதுதான். ஆனால் கொடியானது அடிக்கடி செம்மையாகத் துடிக்காமல் மெதுவாகக் குறைய ஆரம்பிக்கும் பக்ஷத்தில் சிசுவானது சீக்கிரம் வெளிப்படாவிட்டால் சிசு மரித்துப் போமென நிதானிக்க வேண்டியது.

இரத்தவோட்டம் குறைந்து போனதற்கு இன்னொரு அறிகுறியு முண்டு. அதாவது சிசுவானது தேம்ப ஆரம்பிப்பதே. இவ்வித சமயங்களில் தாமதிக்காமல் குழந்தைபைக்கையைக் கொடுத்துத் தலையை வெளிப்படுத்திவிட வேண்டும்.

நமது நாட்டு மருத்துவப்பெண்கள் தங்களுடைய அறிவீனத்தால் சிசுவின்கால் வெளிப்பட்டவுடன் இழுத்துப்போட ஆரம்பித்து விடுகின்றார்கள், இதனால் பிரசவ ஸ்திரீக்குப் பலவித கஷ்டங்க ளுண்டாகின்றன. கால் ஆரம்பத்தில் வெளிப்பட்டால் எல்லாத் தேகத்துடன் தலைவெளிப்படுவது கஷ்டமான காரியம். நாம் முன்சொல்லி யிருக்கிறதுபோல கால்முன்னர் உதயமானவுடன் அங்குள்ள நீரெல்லாம் வெளிப்பட்டு விடுகிறது. கழுத்துவரையில் வெளிப்படுவதற்குள் கருப்பையானது தண்ணீரில்லாமல் வெறுமையாகி விடுகிறது. தலையாத்திரம் உள்ளே தங்கி நின்றுவிடுகின்றது. கருப்பையில் தண்ணீர் இருப்பதினால் சிசுவை வெளிப்படுத்தும் சக்தி அதற்குண்டாகின்றது இவ்விதம் இப்போது தண்ணீரில்லாமற் போவதினால் தலையானது எவ்விதம் வெளிப்படும். இந்தச் சமயத்திலும் தலைவெளிப்படத் தாமதப்பட்டாலும் நாபிக்கொடி துடித்தல் குறைவுபட்டாலும் கையைக் கொடுத்துச் சிசுவை வெளிப்படுத்தி விடவேண்டும். இந்தச் சமயத்தில் வெளிப்படுத்தும் வகையாவது:—

இடதுகையின் இரண்டொரு விரல்களைப் பிள்ளையின் வாயில் கொடுத்து வலதுகையின் இரண்டொரு விரல்களைச் சிசுவின் பிடரியின் பின்பக்கத்தில் வைத்துப் பிடித்துக்கொண்டு சமமான பலம்போட்டு மிகவும் மெதுவாக இழுத்து வெளியிற் கொண்டுவரவேண்டும். ஆனால் சில மருத்துவப்பெண்கள் சிசுவின் இரண்டு தோள்களைப் பிடித்து இழுத்து வெளிப்படுத்துகின்றார்கள். இவ்விதம் செய்வதில் நூற்றிற்கிருபது தேறுவதும் மகாகடஷ்ம் சிசுவின் பிடரியில் பலம்விழுந்து அது இறந்துபோக நேரிடுகிறது.

குறிப்பு.

முழங்கால், கால்கள் ஆகிய இவைகள் உதயமாகும் விஷயம் ஒரேயிடமாக எழுதப்பட் டிருக்கிறது. ஏனெனில் இவ்விரண்டின் பரிகாரமும் ஒரே மாதிரியா யிருப்பதே காரணம். முழங்கால்முன்னர் உதயமாகினும் இரண்டொரு தடவை நோவு கண்டவுடன் காலும் உதயமாகிவிடும்: சிசுவானது தேம்பினபின்

பு பிறந்தால் அதிக துர்ப்பலப்பட் டிருப்பதால் உடனே அழாது. ஆகையால் பின் சொல்லப்படும் சிகிச்சைகளை அந்தச் சமயத்திற் செய்யவேண்டியது.

(இன்னும் வரும்.)

சுகாதார போதினி.

௪-ம் பிரிவு

பாலவைத்தியம்.

முன்தொடர்ச்சி (Vol. 3. பக்கம். 133.)

பாலசுரக் குழம்பு.

நெல்லிக்காய்க் கெந்தகம் பலம்-௫, ஜாதிலிங்கம் பலம்-உ. இவ்விரண்டையும் சேர்த்து செவ்வையாகத் தூள்செய்து வைத்துக் கொள்ளவும். நான்கு வாழைப்பழங்களை தோலைநீக்கிப் பீங்கானிற்போட்டுப்பு து மூங்கிலின் மேற்புறணியைக் கத்தியினாற்சீவி சுமார் அரைப்பலந்தூளை அதிற்போட்டுப் பிசைந்து சற்று தாமதித்துப் பிழிந்தால் முத்துப்போல் ஜலம்வரும் அந்த ஜலத்தைத் தனியே வைத்துக் கொள்ளவும்.

செய்முறை:—முன் சித்தப்படுத்தி யிருக்கிற தூளை ஒரு பெரிய இரும்புக் கரண்டியிற்போட்டு அடுப்பில் விளக்குப்போல் நெருப்பை பெரியவிட்டுக் கரண்டியை அதிற்பிடிக்க அதிலுள்ள மருந்தானது உருகிவரும். அப்பொழுது முன் சித்தப்படுத்தின பழத்தின் ஜலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து தீய்ந்து போகாமல் புரட்டிவர மெழுகு பதமாய்வரும். அந்தச் சமயத்திலிறக்கிப் பீங்கான் சிமிழில் வைத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨. க. தேனிலனுபானித்துக் கொடுக்கவும்.

உபயோகம்:—குழந்தைகளுக்குண்டாம் எல்லா வகை மாந்தரோகங்கள், சுரங்கள் ஆகியவைகள் தீரும்.

கணநெய்.

கூரெள்ளெண்ணெய் பலம்-அ, வெள்ளாட்டுநெய் பலம்-அ, சித்திரமூல வேர்ப்பட்டை பலம்-௨, குங்குமப்பூ பலம்-ஹ, கோரோசனை பலம்-ஹ, வெட்டிவேர் பலம்-௫, விலாமிச்சம்வேர் பலம்-௫, தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு பலம்-௪.

செய்முறை:—எண்ணெயையும் நெய்யையும் ஒன்றாகக்கலந்து சாற்றையும் அதிற்சேர்த்து மற்றசரக்குகளையும் அதிற்போட்டுக் காய்ச்சி மெழுகுபதத்திலிறக்கிக் கொள்ளவேண்டும்.

குறிப்பு.

கோரோசனையையும்; குங்குமப்பூவையும் நெய்யைக் காய்ச்சி யிறக்கி வடிகட்டினபின்பு சேர்த்துக் கொள்வது உத்தமம்.

பிரமாணம்:—விராகனெடை-க. உ.

உபயோகம்:—எல்லாவகை கணரோகங்களும் தீரும்.

ஐங்காயச் சூரணம்.

மேற்றோல் சீவின சுக்கு, அரிசித்திப்பிலி, மிளகு, ஓமம், கருஞ்சீரகம், குராசாணி யோமம், இலவங்கம், இலவங்கப்பட்டை, ஏலம், மஞ்சட் கடுக்காய்த்தோல், வாய்விளங்கம், கண்டத்திப்பிலி, தாளிசப்பத்திரி, மாசிக்காய், அதிமதூரம், அக்கிராகாரம், வெட்பாலையரிசி, தான்றிக்காய், கடுக்காய்ப்பூ, சோம்பு, கறிமஞ்சள், வால்மிளகு, கொத்துமல்லிவிதை, வகை-க-க்குப் பலம்-உ, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, கோரோசனை, இவை வகை-க-க்கு விராகனெடை-க.

செய்முறை:—கோரோசனை தவிர மற்றவைகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்திடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணத்துடன் கோரோசனையைப் பொடித்துச் சேர்த்து நன்றாக மிஸ்ரமித்துச் சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௪. அ, தேன், நெய், வெண்ணெய் முதலியவைகளி லனுபானித்துக் கொடுக்கவும்.

உபயோகம்:—இதனைத் தொடர்ந்தேற்றியாகக் கொடுத்துவர, எல்லாவகை மாந்தரோகங்களும் தீரும். பசிதீபனம் அதிகமாக வுண்டாகும், தேகபுஷ்டி யுண்டாகும்.

கரப்பான் எண்ணெய்.

தேங்காயெண்ணெய், புங்கெண்ணெய், வேப்பெண்ணெய், இவை வகை-க-க்குப் பலம்-ரு, சூடன், கருஞ்சீரகம், கோஷ்டம், நஞ்சுக்கொட்டை இவை வகை-க-க்குப் பலம்-கஉ.

செய்முறை:—மேற்படி மூன்று எண்ணெய்களையும் ஒன்றாகக் கலந்து நான்கு சரக்குகளையும் இடித்து அதிற்போட்டுக் காய்ச்சி வைத்துக்கொண்டு சிரங்கின்மீது பூசிவர கரப்பான் சிரங்கு, ஆறாதபுண் முதலியவைகளிலுள்ள கிருமிகள் செத்து எவ்விதகரப்பான் சிரங்கும் ஆறிப்போகும்.

ககுவான் மாத்திரை.

படிக்காரத்தைப் பொடித்துத் தேன்விட்டு ஒரு மணி நேரமரைத்து மிளகுபோல் மாத்திரைகள் செய்துவைத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:—மாத்திரை க. உ. முலைப்பால், தேன் முதலியவைகளி லனுபானித்துக் கொடுக்கவும்.

உபயோகம்:—கக்குவான் வகைகள் தீரும்.

இன்னும் வரும்.

சுகாதார போதினி.

ரு - ம் பிரிவு

மூலரோகம்

முன்தொடர்ச்சி (vol- III பக்கம்.134)

அந்தி மந்தாரைக்கிழங்கு. (இதனைச் சிறு துண்டுகளாகத் துண்டித்து நிழலிலுலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணம் பலம்-ரு, சீரகத்தை வறுத்திடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் பலம்-ரு, சீனிசர்க்கரை பலம்-ரு.

செய்முறை:—இவை யெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து அரைமணி நேரமரைத்துச் சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—பலம்-வ, அ, இதனை யுட்கொண்டு காலை நேரங்களில் கால், அல்லது, அரை ஆழாக்கு நீராகாரத்தைப் பானஞ் செய்யவேண்டும். மாலையில் கொஞ்சம் பசுவின்பாலைப் பானஞ் செய்யவேண்டியது. இவ்விதம் காலைமாலை யிரண்டு வேளையுமாக இருபது நாட்கள் செய்துவரின் மூலமுளைகள் வேருடன் அற்றுப்போகும். ஏதேனும் பாக்கியிருந்தால்இடையிற் பத்துநாள் விட்டு மறுபடியும் இருபதுநாள் உபயோகிக்கவேண்டும். நாட்பட்ட மூலமுளைகளும் கரிந்து நாசமாகிப்போம்.

பத்தியம்:—உப்பு, புளி, காரவஸ்துக்கள் ஆகியவைகளை நீக்கிவிட வேண்டியது பாலன்னத்தைச் சர்க்கரையுடன் உபயோகிக்கவேண்டியது. பாற்பாயசம், பாற்கஞ்சி ஆகியவைகளையு உபயோகிக்க வேண்டியது. மற்றொன்று மாகாது. ஆனல் சுகுமார தேகிகளானாலும் பத்தியம் ஏற்படுத்தக் கூடாதவர்களா யிருந்தாலும் உப்பை வறுத்தும், புளியைச் சுட்டும் காரமில்லாமல் உபயோகிக்க வேண்டியது. ஆனல் மேற்கண்டபடி பத்தியம் ஏற்படுவதும், பத்தியத்தைக் குறைத்து வைப்பதும், தேகபலம், வியாதிபலம், தேகசுபாவம் முதலியவைகளுக் கேற்றபடி யாதலினல் சிகிச்சகர்கள் இவ்விஷயங்களையெல்லாம் செம்மையாக நிதானித்துச் சமயோசிதம்போல ஏற்படுத்த வேண்டியது. இவ்வித நுட்பமான விஷயங்களையெல்லாம் இங்கு எழுதி முடியாது. சிகிச்சகர்கள் தேகசுபாவம் முதலியவைகளுக்குத் தகுந்ததுபோல் ஏற்படுத்தி வியாதியை வசப்படுத்துவதுதான் சாமர்த்தியம். இது ஒரு தகுந்தமுறையா யிருக்கினும் இதற்கேற்படுத்தப் பட்ட பத்தியமானது கடினமானதாக விருக்கிறது. ஆனல் நெடுநாள் கஷ்டப்படுவதைப் பார்க்கிலும் சிலநாள் கஷ்டப்படுவது உசிதமேயாம் ஆகையால், இஷ்டமானவர்கள் செய்து கொள்ளலாமே தவிர கஷ்டமா யிருப்பவர்கள் எல்லா விதத்திலும் இதனை உபயோகிக்காம லிருக்கலாம்.

வேறு

மேற்படி கிழங்கை மேல்தோலைச்சீவி ஒருபலமெடுத்துக்கொள்ள வேண்டியது. இதனுடன் உப்பு, மிளகு, சீரகம், மஞ்சள், புளி, வெங்காயம், வெந்தயம் முதலிய சம்பாரங்களைத் தேவையான அளவு சேர்த்து அரை, அல்லது, முக்கால் ஆழாக்கு ஜலத்திற் கரைத்து அடுப்பேற்றி இரண்டொருகொதி வந்தபின்பு மறுசட்டியில் அரைப்பல நெய்யைவார்த்து நன்றாயச் சூடுகண்டவுடன் அரைப்பலம் வெங்காயத்தைச் சிறுக அரிந்து எழுதடவைகள் ஜலத்திற்போட்டு கழுவி முன் நெய்யிற் போட்டு வறுத்துச் சிவந்த பதத்தில் முன் சித்தப்படுத்திவைத்திருக்கும் இரசத்தை மெல்லிய வஸ்திரத்தில் வடிகட்டித் திப்பியைநீக்கி இரசத்தை மாத்திரம் அதில்விட்டுப் பாத்திரத்தால் மூடிவிடவேண்டும். பிறகு சற்றுநேரஞ்சென்று திறந்து இரண்டு மூன்றுகொதி வந்தபின்பு இறக்கிச் கொஞ்சம் ஆறினபின்பு சுமார் ஒருபலம் சாப்பிடவேண்டும். மீதியாயிருப்பதை

ச் சுடுசாதத்துடன் காப்பிடவேண்டும். இவ்விதம் பிரதி காலையிலும் தொடர்ச்சியாகச் சிலநாட்கள் செய்துவரின் மூலமுளைகள் எரிந்து கரைந்து நாசமாகிவிடும். இடையில் இரண்டொரு நாட்கள் விடுப்போனபோதிலும் பாதகமில்லை. சுகுமார தேகிகள்முதலிய யாவரும் உபயோகிக்கலாம். ஆனால், நெடுநாட்செய்யவேண்டிய கஷ்டம் ஒன்றிருக்கிறது. அவசியமானவர்கள் கஷ்டத்தைப் பாராமல் செய்யவேண்டியது தான் கடமை.

(இன்னும் வரும்)

சுகாதார போதினி.

௬ - ம் பிரிவு.

இரசவாதம்.

முன்தொடர்ச்சி (Vol-3. பக்கம் 136)

வெட்டைப்பொன்னை நைப்பாக்கு முறை.

வாதமுறைக்காம் செந்தூரம் முதலியவைகளை உலோகத்தின்மீது கொடுத்தால் பொன்னாகி அல்லது வெள்ளியாகும். ஆனால் சிலசமயங்களில் அப்படியானது வெட்டையாயிருக்கும், அதாவது:—சுத்தியினால் அடித்தால் தூளாக நொறுங்கிப்போவது. அல்லது, கம்பி, தகடு முதலியவைகளுக்கு வராமல் விரிந்துபோவது. இதன் காரணம் அதில வறட்சி மிகுதியாவதேயாய். இவ்விதமே மேற்சொல்லியிருக்கிறபடி சித்தப்படுத்தும் மட்டங்களும் வெட்டையாகி வேலைக்கு உதவாமற்போகும். அவ்விதம் வெட்டையான பொன்னை அல்லது, மட்டத்தை நைப்பாக்கு முறைகளை பெறுவதற்குமுன் வெட்டையாக நேடும்சில ஏதுக்களை முன்னர் தெரிந்துகொள்ள வேண்டியது ஆவசியகம். ஏனெனில் வெட்டையாகும் ஏதுக்களைத் தெரிந்துகொண்டால் அதனை உடனே நீக்கி நிவர்த்தி செய்துகொள்ள உற்ற சகாயமாயிருக்குமென்பதே. அவையாவன:—

1. ஒரு உலோகத்தை உருக்கி உருக்குமுகத்தில் கொடுக்கவேண்டிய மருந்தைக் கொடுக்கவேண்டியது. அப்படியிருக்கச் சிலசமயங்களில் அது நன்றாய்க் கண்விட்டாடி உருகுமுன்னமே மருந்தைக் கொடுப்பதினால் அது வெட்டையாக ஏதுவாகும். கொடுத்த மருந்தானது உள்ளும் புறமும் ஊடுருவிப் பாயாமல் உபயோகமற்றதாகிவிடும். ஆகையால் இந்த விஷயத்தைக் கவனத்தில்வைத்து உலோகமானது நன்றாயுருகிக் கண்விட்டாடினபின் மருந்தைக் கொடுக்கவேண்டும்.

2. சில சமயங்களில் உலோகத்திற் கொடுக்க வேண்டிய மருந்தின் அளவு அதிகமாகி விடுவதினாலும் அது வெட்டையாகிவிடுவதுண்டு. இப்படி நேருவதற்குக் காரணம் வாதியின் அனுபவக்குறைவு, அல்லது, குறைந்த அளவு மருந்தை உபயோகித்து சரியான வர்ணம்வராதிருந்த நிமித்தம் அதிக அளவான மருந்தை உபயோகித்ததேயாம்.

3. சில மருந்துகளின் சுபாவகுணமே அதனை யுபயோகித்த உலோகத்தை வெட்டையாக்கி விடுவது. ஆகையால் இந்த விஷயத்தையும் கவனித்துக் கீழ்க்காணுமுறைப்படி நைப்பாக்கிக் கொள்ளவேண்டும்.

4. சில சமயங்களில் வெள்ளைப் பாஷாணம், அல்லது, தாளகம், அல்லது கெந்தகம் ஆகியவைகளுள் ஒன்றின் சிலபாகம் உபயோகிக்குமருந்தில் பச்சையாக இருந்து விடுவது. அல்லது, கும்மட்டியிலுள்ள கரியுடன் கலந்துகிடப்பது, அல்லது உருக்குமூசையில் அவற்றின் வாடையிருந்து அதில் உருக்க நேரிடுகிறது. இந்தக் காரணங்களினால் உலோகமானது வெட்டையாகிவிடும். ஆகையால் இவ்வித விஷயங்கள் நேரிடாதபடி ஜாக்கிரதைசெய்ய வேண்டியது.

5. சில சமயம் நாகம், காரீயம், மிருதார்சிங்கி இவைகளின் வாடைபடுவதினாலும் உலோகமானது வெட்டையாகிவிடும். ஆகையால், இவ்வித சரக்குகளின் சம்மந்தம், வாடை முதலியவைகளில்லாதபடி ஜாக்கிரதைசெய்ய வேண்டியது

6. சில சமயங்களில் ஊதுகுழாய் முதலியவைகளிற் கெந்தகம், அல்லது, அரிதாரம் ஆகியவைகளின் வாடைதங்கி நிற்பதுமுண்டு. அதனாலுதி உருக்கின லோகமானது வெட்டையாகிவிடும். ஆகையால், இந்த விஷயத்தையும் கவனத்தில் வைக்கவேண்டியது.

7. சில மரங்களின் கரி நெருப்பில் உலோகங்களை யுருக்குவதினால் அந்த உலோகமானது வெட்டையாகி விடுகிறதுமுண்டு, சில மரத்தின் கரிக்கு இவ்வித சுபாவகுணமிருப்பதால். அந்த விஷயத்தையும் கவனித்துச் செய்யவேண்டியது.

(இன்னும் வரும்.)